பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 03 2025 **FRIDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மருத்துவ சிகிச்சையில் எய்ம்ஸ் மருத்துவமனை பல்லாயிரக்கணக்கான மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
- மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மத்திய அரசு உறுதி செய்திருப்பதாக சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல்துறை அமைச்சர் திரு. வீரேந்திரகுமார் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் 93 ஆயிரத்து 376 கோடி ரூபாய் மதிப்பிலான 98 சாகர்மாலா திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.
- ரயில்வே, ஜல்சக்தி, வேளாண் அமைச்சகங்களுக்கான மானிய கோரிக்கைகள் மக்களவையில் நிறைவேறின.
- உலக கோப்பை ஜிம்னாஸ்டிக் போட்டியில் இந்தியாவின் **Pranati Nayak** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<

மருத்துவ சிகிச்சைக்காக வரும் ஆயிரக்கணக்கான மக்களின் நம்பிக்கைக்குரிய சின்னமாக எய்ம்ஸ் மருத்துவமனைகள் திகழ்வதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் 49வது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று அவர் உரையாற்றினார்.

சுகாதார சேவை, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளில் உலக அளவில் நிபுணத்துவத்தை கொண்டதாக, எய்ம்ஸ் மருத்துவமனைகள் திகழ்வதாக அவர் தெரிவித்தார்.

சிகிச்சைக்காக வரும் அனைத்து நோயாளிகளையும், மருத்துவர்களும், மருத்துவப் பணியாளர்களும் பாரபட்சமின்றி சிகிச்சை அளித்து, அவர்களின் நன்மதிப்பை பெறும் வகையில் எய்ம்ஸ் செயல்பட்டு வருவதாகவும் குடியரசுத்தலைவர் கூறினார்.

தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையைப் பொறுத்தவரை 69 ஆண்டுகளாக அதிநவீன மற்றும் உயர் சிகிச்சைகளை வழங்கி வருவதாக குறிப்பிட்ட அவர், இங்கு பயின்று, நாட்டின் பல்வேறு இடங்களிலும், வெளிநாடுகளிலும் மருத்துவ சேவையாற்றி வருவோரே அதற்கு சாட்சி என்று தெரிவித்தார்.

நவீன மருத்துவ முறைகள் மட்டுமல்லாது, பாரம்பரிய மருத்துவ முறைகளான ஆயுர்வேதம், யோகா போன்ற பல்வேறு சிகிச்சை முறைகளின் மூலமும் மக்கள் பயனடைந்து வருவதாக திருமதி. திரௌபதி முர்மு கூறினார்.

**>>>>>><<<<<**

நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முந்தைய காலங்களில் இடையூறாக இருந்த தீவிரவாதம் உள்ளிட்ட சவால்களை மத்திய அரசு முற்றிலுமாக முறியடித்துள்ளது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் உள்துறை அமைச்சகத்தின் செயல்பாடுகள் தொடர்பான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், ஜம்மு காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் நீடித்து வந்த தீவிரவாதம், இடதுசாரி பிரிவினைவாத செயல்களை பிஜேபி தலைமையிலான மத்திய அரசு இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கியுள்ளதாக கூறினார்.

தீவிரவாதத்திற்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்திருப்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அமைந்த பின்னர் தீவிரவாதத்தால் ஏற்படும் உயிரிழப்புகள் 70 சதவீதம் குறைந்துள்ளது என்று தெரிவித்தார்.

**>>>>>><<<<<**

மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளித்து அவர்கள் சுயசார்பு நிலையை அடைவதற்கு மத்திய அரசு உத்தரவாதம் அளித்திருப்பதாக சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல்துறை அமைச்சர் திரு. வீரேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று மாற்றுத் திறனாளிகளுக்கான **Purpel Fest** என்ற நிகழ்ச்சியை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

கடந்த 2016ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர், அவர்களின் தன்னம்பிக்கை அதிகரித்து, வாழ்வில் மேம்பாடு அடைந்து வருவதாக கூறினார்.

இந்த ஆண்டு நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக சுமார் 65 ஆயிரம் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்பதற்கு பதிவு செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

அங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்ட திரு. வீரேந்திர குமார், மாற்றுத்திறனாளிகளுடன் கலந்துரையாடினார்.

>>>>>><<<<<

தமிழகத்தில் 93 ஆயிரத்து 376 கோடி ரூபாய் மதிப்பிலான 98 சாகர்மாலா திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இதன்மூலம் துறைமுகங்கள் நவீனமயமாக்குதல், போக்குவரத்து இணைப்பு, துறைமுகத்தை முதன்மைபடுத்தும் தொழில் மயம், கடலோரப் பகுதி மக்களின் மேம்பாடு, கப்பல் போக்குவரத்து மற்றும் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து விரிவுபடுத்தப்படும் என்று கூறினார்.

அனுமதி வழங்கப்பட்ட இந்த திட்டங்களில் 37 ஆயிரத்து 517 கோடி ரூபாய் மதிப்பிலான 54 திட்டங்கள் நிறைவடைந்திருப்பதாகவும், 13 ஆயிரத்து 625 கோடி ரூபாய் மதிப்பிலான 17 திட்டங்கள் தயார்நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், 42 ஆயிரத்து 133 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களின் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புதுச்சேரியை பொறுத்தவரை 5 ஆயிரத்து 294 கோடி ரூபாய் மதிப்பிலான 8 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு, 3 திட்டங்களுக்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு. சர்பானந்த சோனோவால் கூறினார்.

>>>>>><<<<<

யுக்ரைன் - ரஷ்யா இடையே போரை முடிவுக்கு கொண்டு வருவதில் இந்தியா தெளிவான நிலைப்பாட்டை கொண்டிருப்பதாக வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இருதரப்புக்கும் இடையேயான நடைமுறை ரீதியிலான அமைதியை ஏற்படுத்துவதில் இந்தியா எப்போதும் உறுதியாக உள்ளது என்று கூறினார்.

போரை நிறுத்தி, நீண்டகால அடிப்படையில் தீர்வு ஏற்படுவதையே இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேபோல், இந்தியாவுக்கும் - ஐரோப்பிய யூனியனுக்கும் இடையேயான ஒத்துழைப்பு குறித்து குறிப்பிட்ட திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், கடந்த மாதம் ஐரோப்பிய யூனியன் தலைவர் இந்தியா வந்திருந்தபோது அதுபற்றி விரிவான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக பதிலளித்தார்.

ஐரோப்பிய யூனியனுடன் பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பு என்பது முக்கியமானதாக கருதப்படுவதால் அதுபற்றி விரிவான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்தியா – சீனா இடையேயான அமைதி பேச்சுவார்த்தையை பொறுத்தவரை **Kazan** நகரில் சீன அதிபர் திரு. **Xi Jinping** –குடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நடத்திய ஆக்கபூர்வமான பேச்சுக்களைத் தொடர்ந்து, நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

**>>>>>><<<<<**

ரயில்வே, ஜல்சக்தி, வேளாண்துறை உள்ளிட்ட பல்வேறு அமைச்சகங்களுக்கான மானிய கோரிக்கைகள் மக்களவையில் நிறைவேற்றப்பட்டன.

நாடாளுமன்றத்தில் மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு, இரண்டாவதுகட்ட கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், துறைவாரியான மானிய கோரிக்கைகள் மீது விவாதம் நடத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் பதிலுரைக்குப் பின்னர் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இந்த வார தொடக்கத்தில் ரயில்வே உள்ளிட்ட துறைகளின் மீதான விவாதம் நிறைவடைந்தது.

அதனை தொடர்ந்து ரயில்வே, ஜல்சக்தி, வேளாண்துறைகளுக்கான மானிய கோரிக்கைகள் நிறைவேறின.

**>>>>>><<<<<**

உலகின் தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட நாடுகளுடன் நல்லுறவை மேம்படுத்தியிருப்பதாக மத்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்க்கரிட்டா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், அந்த நாடுகளுடான இருதரப்பு உறவுகள் வலுவான வெளியுறவு கொள்கைகளின் மூலம் மேலும் முன்னேற்றம் அடைந்திருப்பதாக கூறினார்.

அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை, கிழக்கு நோக்கிய கொள்கை, இருதரப்பு முன்னேற்றத்தை நோக்கிய பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி சார்ந்த முன்முயற்சிகள் போன்றவற்றால் பல்வேறு நாடுகளுடனான உறவுகள் மேம்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் நோக்கிலான அணுகுமுறையை இந்தியா கொண்டிருப்பதாகவும் திரு. பபித்ரா மார்க்கரிட்டா தெரிவித்தார்.

**>>>>>><<<<<**

லடாக் எல்லையை ஒட்டி, **Hotan** மாகாணத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கையை சீனா மேற்கொண்டிருப்பதற்கு மத்திய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

மக்களவையில் இதுகுறித்து பேசிய வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன்சிங், சீனா தனது மாகாணத்தில் விரிவுபடுத்தவுள்ள புதிய பகுதிகளின் எல்லை, இந்தியாவின் லடாக்கில் வருவதை சுட்டிக்காட்டினார்.

சீனாவின் இதுபோன்ற சட்டவிரோத ஆக்கிரமிப்பை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என்று வலியுறுத்தியிருப்பதாக அவர் கூறினார்.

லடாக் பகுதியில் இந்தியாவின் இறையாண்மை மற்றும் நீண்டகால நிலைப்பாட்டை மீறி ஆக்கிரமிப்பு செய்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் திரு. கீர்த்தி வர்தன்சிங் உறுதிபட தெரிவித்தார்.

**>>>>>><<<<<**

கர்நாடக சட்டப் பேரவையில், பேரவைத் தலைவரை அவமதித்ததாக கூறி, பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்கள் 18 பேர், 6 மாத காலத்திற்கு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கர்நாடக சட்டப்பேரவையின் பிஜேபி கொறடா திரு. அஸ்வத் நாராயன், திரு. தொட்டனகவுடா பாட்டீல் உள்ளிட்டோர் இடைநீக்கம் செய்யப்பட்டவர்களில் அடங்குவர்.

அவர்கள் மீதான இந்த நடவடிக்கையின் மூலம் ஆறு மாத காலம் பேரவைக்கு வரஇயலாத நிலைய உருவாகியுள்ளுத.

**>>>>>><<<<<**

உலக கோப்பை ஜிம்னாஸ்டிக் போட்டியில் இந்தியாவின் **Pranati Nayak** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

துருக்கியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டங்களில் மூன்றாவது இடத்தை பிடித்ததன் மூலம் இறுதியாட்டத்திற்கு முன்னேறினார்.

**>>>>>><<<<<**

சென்னை சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Veer Chotrani** மற்றும் **Anahat Singh** பட்டம் வென்றனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் **Veer Chotrani** 3-11, 12-10, 11-6, 11—7 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் **Melvil Scianimanico-**வை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் **Anahat Singh**, 11-6, 8-11, 11-8, 11-5 என்ற செட்கணக்கில் **Akankasha Salunkhe-**வை வென்றார்.

**>>>>>END<<<<<**